செய்தி வெளியீடு எண்: 30 நாள்: 18.04.2018

**தேனி மாவட்டம்,**
**ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட ஜி.உசிலம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற**
**மக்கள் தொடர்பு முகாமில் 76 பயனாளிகளுக்கு ரூ.21,13,616/- மதிப்பிலான**
**தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்:-**

******

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட ஜி.உசிலம்பட்டி கிராமத்தில் (18.04.2018) இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், வருவாய்த்துறையின் சார்பில், விலையில்லா வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 18 பயனாளிகளுக்கு ரூ.13,94,555/- மதிப்பிலான வீட்டுமனைப்பட்டாக்களையும், மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 54 பயனாளிகளுக்கு ரூ.6,48,000/- மதிப்பீட்டில் மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/- வீதம் ரூ.50,000/- மதிப்பிலான வேளாண் இடுபொருட்களையும், வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு தலா ரூ.4,480/- வீதம் ரூ.13,440/- மதிப்பிலான சோலார் விளக்குகளையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.3,386/- மதிப்பிலான தையல் இயந்திரத்தினையும், விலையில்லா தேய்ப்பு பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.4,235/- மதிப்பிலான தேய்ப்பு பெட்டியினையும் என மொத்தம் 76 பயனாளிகளுக்கு ரூ.21,13,616/- மதிப்பிலான தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளையும், மேலும், வருவாய்த்துறையின் சார்பில் பட்டா மாறுதல் வழங்கும் திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணையினையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 27 பயனாளிகளுக்கு தொழிலாளர் நல வாரிய அட்டைகளையும், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் 20 பயனாளிகளுக்கு புதிய (Smart Card) அட்டைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு பயன்களை வழங்கி தெரிவிக்கையில், மக்கள் தொடர்பு முகாம் என்பது துறை ரீதியான அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து மாவட்டத்தில் ஒரு கிராமத்தை தேர்வு செய்து அரசின் திட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து, தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்குவது மக்கள் தொடர்பு முகாமின் முக்கிய நோக்கமாகும். அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்களை அனைவரும் தெரிந்து வைத்திருப்பது அறியதாகும். எனவே, கிராமங்களில் நடத்தப்படும் மக்கள் தொடர்பு முகாமில் துறைகள் வாயிலாக கண்காட்சி அரங்குகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மூலம் திட்ட விளக்கவுரையின் வாயிலாக பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு மனிதன் கல்வி கற்பதன் மூலம் தான் மட்டுமல்லாமல், தன்னைச் சார்ந்த குடும்பமும் முன்னேற்றம் அடைவதற்கு வழிவகை ஏற்படும். பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை கல்வி கற்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழக அரசு கல்வியின் முக்கியத்துவம் கருதி, ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதனை பொதுமக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழக அரசு விவசாயிகளின் நிலையை கருத்தில் கொண்டு, எண்ணற்ற வேளாண் சார்ந்த திட்டங்களை தீட்டி செயலபடுத்தி வருகிறது. அதனடிப்படையில், தமிழக அரசு நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைத்திட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத அரசு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத அரசு மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் நுண்ணீர் பாசனத்திட்டத்தினை முறையாக மேற்கொண்டு விவசாயம் செய்திட வேண்டும்.

தமிழக அரசு கூட்டுப்பண்ணைத்திட்டத்தின் கீழ் ஒரே கிராமத்தில் தொகுப்பாக நிலமுள்ள ஒவ்வொரு விவசாயியும் பங்கேற்புத் தொகையாக குறைந்தபட்சம் ரூ.500/- செலுத்தி உறுப்பினருக்கான அங்கீகாரம் பெற்ற பின்னர், 20 சிறு, குறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு, விவசாய ஆர்வலர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, வேளாண் பணிகளுக்கான இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதனைபோன்று அருகில் உள்ள 5 விவசாய ஆர்வலர் குழுக்களை இணைத்து, குறைந்தபட்சம் 100 சிறு, குறு விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு, உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கும் வேளாண்மை தொடர்பான பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ரூ.5 இலட்சம் மூலதன நிதியின் மூலம் இக்குழுவில் உள்ள சிறு, குறு விவசாய உறுப்பினர்கள் தங்களின் தேவைக்கேற்றவாறு, பல்வேறு வேளாண் இடுபொருட்களை வழங்கி வருகிறது.

புதிய தொழில் புரிய விருப்பமுள்ளவர்கள் சந்தையில் பொருளுக்கான தேவை என்ன, பொருளின் முக்கியத்துவம் அறிந்து அதன் விற்பனை இடங்கள், உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்களை கண்டறிந்து குறைந்த செலவில் எவ்வாறு உற்பத்தி செய்வது என்பதை கணக்கிட்டு தொழில் தொடங்கிட வேண்டும். புதிய தொழில் முனைவோர்களுக்கு வங்கிகளே தனியாக பயிற்சி அளித்து வங்கிக்கடனாக நீட்ஸ் திட்டத்தின் மூலம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடி வரை 25 சதவீத மானியத்தில் கடனுதவியும் அளித்து வருகிறது. வங்கிக்கடன் பெற்ற தொழில் முனைவோர்கள் முறையாக வங்கிக்கடனை திருப்பிச் செலுத்தும் போது எதிர்காலத்தில் உங்களுடைய தொழில் அபிவிருத்திக்குத் தேவையான நிதியினை வங்கிகள் அளிக்க முன் வரும்.

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு மாதந்தோறும் மகளிர் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் தனியார் நிறுவனங்களை ஒருங்கிணைத்து மாதாந்தோறும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், 22.04.2018 அன்று வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படவுள்ளது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயனடையலாம். இதுபோன்று, தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை கொண்டு பொதுமக்கள் தங்கள் வாழ்வில் வளம்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மேலும், மக்கள் தொடர்பு முகாமினை முன்னிட்டு ஜி.உசிலம்பட்டி கிராம பொதுமக்களிடம் 02.04.2018 முதல் துறை அலுவலர்கள் மூலம் 150 மனுக்கள் பெறப்பட்டு, 111 மனுக்கள் ஏற்கப்பட்டு, 31 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மீதுமுள்ள 8 மனுக்கள் உரிய மேல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பின்னர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கட்டுப்பாட்டில் உள்ள புதுக்குளம் கண்மாயை பார்வையிட்டு, அதில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றிடவும், கண்மாய்க்கு நீர் வரும் வழிப்பாதைகளை சீரமைத்திடவும், மழைக்காலங்களுக்கு முன்பாக விரைந்து இப்பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இம்முகாமில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.கிஷோர்குமார் அவர்கள், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.து.தங்கவேல் அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.ரசிகலா அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.உமையாள் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.கிருஷ்ணவேணி அவர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் திருமதி.ராஜராஜேஸ்வரி அவர்கள், மாவட்ட தொழில் மைய மேலாளர் திரு.ராமசுப்பிரமணியன் அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.வைத்தியலிங்கம் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**